පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය திகதி Date | 28.01.2025 நேரம்1035 மணி | දුරකථන தொலைபேசி Telephone | 011-2887973 | මගේ අංකය எனது இலக்கம் My No | D/Media/out/ 159/2025 | ඊ මේල් மின்னஞ்சல் E-mail | dir.media@police. gov.lk |

**01.** **ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது - விஷேட அதிரடிப் படை கோணஹேன முகாம்.**

27.01.2025 ஆம் திகதி மாலை வேளையில் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்கு (கோணஹேன முகாம்) கிடைக்கப் பெற்ற தகவலின் படி கடவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பஹல கரகஹமுன பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மேற் கொண்டதில் 27 கிராம் 700 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை தன் உடமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு கடவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஆவார்.

கடவத்தைப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

**02.** **ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது - மாதம்பிட்டி பொலிஸ் நிலையம்.**

27.01.2025 ஆம் திகதி பகல் வேளையில் மாதம்பிட்டி பொலிசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மாதம்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரன்திய உயன பிரதேசத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு 10 கிராம் 270 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபர் ஆவார்.

மாதம்பிட்டி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

**03.** **ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது - கல்கிசை பொலிஸ் நிலையம்.**

27.01.2025 ஆம் திகதி பகல் வேளையில் கல்கிசைப் பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, விமான நிலையம் சந்திக்கு அருகாமையில் தேடுதல் மேற்கொண்டு 10 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின்

போதைப் பொருளை தன் உடமையில் வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் *36* வயதுடைய இரத்மலானைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

**04. உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது - புளியங்குளம் பொலிஸ் நிலையம்.**

*27.01.2025* ஆம் திகதி பகல் வேளையில் புளியங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேமமடு பிரதேசத்தில் புளியங்குளம் பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொண்டு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் *26* வயதுடைய பெரியகுளம், கனகராயன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

புளியங்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**05. உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது - இங்கினியாகலை பொலிஸ் நிலையம்.**

*27.01.2025* ஆம் திகதி பகல் வேளையில் இங்கினியாகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரகஹகெலே பிரதேசத்தில் இங்கினியாகலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொண்டு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை தன் உடமையில் வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் *44* வயதுடைய பரகஹகெலே, அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

இங்கினியாகலை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**